S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் டிசம்பர் 03 * 2025 * மலர் -1 * இதழ்-185* VOL-1 * ISSUE-185 விலை ரூ.3 * பக்கம் -4

# திருவண்ணாமலையில் குவிந்த லட்சக்கணக்கான பக்தர்கள்!

## மகா தீப கொப்பரை மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது!!

திருவண்ணாமலை, டிச.3–

திருவண்ணாமலைகார்த்திகைதீபதரிசனவிழாநாளைநடைபெறஉள்ள நிலையில் திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். அக்னி ஸ்தல மான திருவண்ணாமலை யில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த மாதம் 24 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

10 நாட்கள் நடைபெறும் கார்த்திகை தீபத் திருவிழாவின் உச்ச விழாவான தீப தரிசன விழா நாளை நடைபெற உள்ளது. நாளை அதிகாலை 4 மணிக்குஅண்ணாமலையார்கோவிலில்பரணிதீபம்ஏற்றப்படும். மாலை 6 மணிக்கு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் அண்ணா மலையார் சன்னதி முன்பு ஆனந்த நடனத்துடன் எழுந்தருள 2 ஆயிரத்து 668 அடி உயரமுள்ள அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும். நாளை முதல் 11 நாட்களுக்கு அண்ணாமலை உச்சியில் சிவபெருமான் தீப்பிழம்பாய் காட்சி தருவார். திருவண்ணா மலை நகரில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் வரை மகாதீபம் தெரியும்.

அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும் மகா தீப கொப்பரைக்கு இன்று அதிகாலை அண்ணாமலையார் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 2 ஆயிரத்து 668 அடி உயரம் உள்ள அண்ணாமலை உச்சிக்கு மகாதீப கொப்பரை கொண்டு செல்லப்பட்டது. மகாதீபம் ஏற்ற 4 ஆயிரத்து 500 கிலோ நெய் பயன்படுத்தப்படும். பக்தர்கள் வசதிக்காக சிறப்பு பேருந்துகள், சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. பக்தர்களின் பாதுகாப்பிற்காக 15 ஆயிரம் போலீசார் திருவண்ணாமலையில் முகாமிட்டு ள்ளனர். கிரிவலப்பாதையில் காவல்துறை சார்பில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருவண்ணாமலை நகரம் மற்றும் கிரிவலப் பாதை முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கட்டுப்பாட்டு அறை அமைத்து கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. பக்தர்களின் வசதிக்காக அண்ணாமலையார் கோவில் மற்றும் கிரிவலப்பாதையில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.





சென்னை தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்காக சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் 39 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்குடியிருப்பினைதிறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும்செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் வெ.ஷோபனா, செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## டிட்வா புயலால் பாதித்த பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு



சென்னை மாநகராட்சி அலுவலக லக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, 1913 என்ற உதவி எண்ணிற்கு தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் புகார் குறித்த விவரங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார்.



புரசைவாக்கம் தானா தெரு, செல்லப்பா தெரு ஆகிய இடங்களில் மழைநீரை டிராக்டருடன் இணைக்கப்பட்ட அதிக சக்தி வாய்ந்த பம்புகள் மூலம் அகற்றும் பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட் வரும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மிகப்பெரிய எல்.ஈ.டி கண்காணிப்பு திரைகளில் வெவ்வேறு சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து மற்றும் கால்வாய்களில் நீர்மட்டம் குறித்து கண்காணிப்பு கேமராக்கள் மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, வி.க.நகர் மண்டலம், வார்டு74க்குட்பட்ட பகுதியில் மழையினை முன்னிட்டு மக்களுக்கு மாநகராட்சியின் சார்பில் தயாரிக்கப்பட்ட இரவு உணவினை மேயர் பிரியா வழங்கினார்.

## பெண் ஆசிரியை ரோபோ

உத்தரப்பிரதேச மாநிலம் புலந்த்சாஹரைச் சேர்ந்த 17 வயது பள்ளி மாணவர் ஆதித்யா. பெண் ஆசிரியை ரோபோவை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

இது மாணவர்களுடன் உரையாடி, கேள்வி கேட்கும்வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## தாராபுரம் அருகே குண்டடத்தில் ரூ.1.77 கோடி மதிப்பில் நான்கு வழிச்சாலை அமைச்சர்கள் சாமிநாதன் மற்றும் கயல்விழி ஆகியோர் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தனர்!

தாராபுரம்,டிச.3

திருப்பூர் மாவட்டம் குண்டடம் பகுதியில் இரண்டு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் பணி தொடங்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப., தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நெடுஞ்சாலைத்துறை சார்பில், ஈரோடு–தாராபுரம் சாலையில் நத்தக்காடையூர் முதல் குண்டடம் பிரிவு வரை 18.30 கி.மீ. தூரத்திற்கு ரூ.132 கோடி, குண்டடம் பிரிவு முதல் வரப்பாளையம் வரை 6 கி.மீ. தூரத்திற்கு ரூ.45 கோடி மதிப்பில் சாலை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகுறித்து செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் தெரிவித்ததாவது:



முதல்வர்மக்களுக்கான நலத்திட்டங்களை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கைஎடுத்து வருகிறார். பெண்கள் கட்டணமில்லாபேருந்து பயணம், சுயஉதவி குழுக்களின் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு, பள்ளி மாணவர்களுக்கு கண்ணொளி பரிசோதனை, காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் உள்ளிட்டபலதிட்டங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் 2021 முதல் 2025 வரை ரூ.1,185 கோடியில் 361 கி.மீ. சாலைகள் அகலப்படுத்துதல், ரூ.398 கோடியில் 559 கி.மீ. சாலைகள் வலுப்படுத்துதல், ரூ.132 கோடியில் 91 பாலங்கள் உள்ளிட்ட மொத்தம் ரூ.1,715 கோடி மதிப்பிலான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பின்னர், ஊதியூரில் 15 பெட்டிபாலங்கள், 3 சிறு பாலங்கள், 1 கூடுதல் பாலம், மையத்தடுப்பான் அமைத்தல், சாலை சந்திப்பு மேம்பாடு, நில எடுப்பு பணிகள் உள்ளிட்ட பணிகளும் துவக்கமிடப்பட்டன.

நிகழ்ச்சியில் திருப்பூர் நான்காம் மண்டல தலைவர் இ.ல. பத்மநாபன். குண்டடம் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர். மாவட்ட பிரதிநிதி பெரியசாமி மற்றும்

கண்காணிப்புப் பொறியாளர் ஏ.எஸ். விஸ்வநாதன், கோட்டப் பொறியாளர்கள் ஈ. இரத்தினசாமி, ராணி, உதவி பொறியாளர்கள் மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கோவை டிவிஎஸ் நகர் ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம்!

கோவை டிச.03

கோவை மாவட்டம் டிவிஎஸ் நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சுந்தர விநாயகர் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



கும்பாபிஷேக நாள் காலை 4 மணிக்கு மங்கள இசை உடன் தொடங்கி ஸ்பர்சாகுதி, நாடி சந்தானம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி தீபாராதனை, யாத்ராதானம் நடைபெற்றது. காலை 6:00 மணிக்கு கடம் புறப்பாடு,காலை 6:15 7;15 மணிக்கு ஸ்ரீ சுந்தர விநாயகர்,வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர்,ஸ்ரீ மீனாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ சொக்கநாதர் மற்றும் மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ எம். ஹரிஹரசுப்ரமணியன் பட்டர் தலைமையில் நடைபெற்றது. உடன் குருக்கள் லட்சுமி நாராயணன் இருந்தார்.

மாலை 6 மணிக்கு மேல் பிரசன்ன பூஜைல்,ஸ்ரீ மீனாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ சொக்கநாதர் மற்றும் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியருக்கும் திருக்கல்யாணவைபவம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து தீபாராதனை, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த கும்பாபிஷேக விழாவை ஸ்ரீசுந்தர விநாயகர் ஆலய கமிட்டி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.



# மாஜி ஒன்றிய செயலாளர் நினைவு தினம்; திமுகவினர் அஞ்சலி!

மத்தூர் டிச.03

மத்தூர் ஒருங்கிணைந்த தி.மு.க., முன்னாள் ஒன்றிய செயலாளர் பொன்.குணசேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு அவரதுதிருவுருவபடத்திற்குதிமுகவினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மத்தூர் ஒருங்கிணைந்த தி.மு.க., முன்னாள் ஒன்றிய செயலாளர் பொன்.குணசேகரன் நான்காம் ஆண்டு நினைவு நாள் மத்தூர் பேருந்து நிலையத்தில் பெரியார் சிலை அருகில் நடந்தது.

இதையொட்டி,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிரி ஆகியோர் மறைந்த முன்னாள் மத்தூர் ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் மத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவரும் குணா மெட்ரிகுலேஷன் பள்ளியின் நிறுவனர் பொன்.குணசேகரன் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், தி.மு.க., மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர்கள் குன்.வசந்தரசு, மாநில செயற்குழு உறுப்பினர் செந்தில், மாவட்ட பொருளாளர் கதிரவன், முன்னாள் ஒன்றிய குழு பெரும் தலைவர் விஜயலட்சுமி பெருமாள், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளரும் மத்தூர் ஊர் செட்டியார் கமலநாதன், முன்னாள்மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.சங்கர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கதிர்வேல், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் அரிமா தனசேகரன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளரும் ஒப்பந்ததாரர் அருண், ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஆட்டோ குமார்,உட்பட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக மற்றும் கிளைக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### குரும்பேரி ஏரி நிரம்பி வீணாகச் செல்லும்

# உபரி நீரை மற்ற கிராம ஏரிகளுக்கு, திருப்பக்கோரி பொதுமக்கள் கலெக்டரிடம் மனு!





திருப்பத்தூர் டிச.3

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் தற்போது கனமானது முதல், லேசாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த குறும்பேரி கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்கள் வசித்து வருகின்றனர்.

ஜவ்வாது மலை மீது பொழியும் மழையின் காரணமாக அந்த உபரி நீர் ஆண்டுதோறும் குறும்பேரி பெரிய ஏரியின் கிழக்கு பக்கம் உள்ள கால்வாயில் வந்தடைகிறது.

இந்த பெரிய ஏரியில் நீர் நிரம்பி உபரியாக வெளியேறி பாம்பாற்றில் கலந்து சாத்தனூர் அணை வழியாக கடலுக்கு சென்று வீணாக கலக்கிறது என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் குரும்பேரி ஏரி நிரம்பி வீணாக செல்லும் உபரி நீரை பக்கத்து கிராம ஏரிகளான விசமங்கலம், கோடியூர், சித்தேரி போன்ற கிராமத்தைச் சுற்றிலும் சுமார் 8ஏரிகள் உள்ளது.

எனவே குரும்பேரி ஏரியிலிருந்து வீணாக செல்லும் உபரி நீரை இந்த கிராமங்கள் பயன்பெறும் வகையில் இருக்கும் கால்வாயை சுத்தப்படுத்தி பயன்பெறும் வகையில் அமைத்தாலே அனைத்து ஏரிகளும் நிரம்பி இதனை சுற்றியுள்ள சுமார் 300 ஏக்கருக்கு தேவையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் எனக்கூறி குறும்பேரி கிராம மக்கள் 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

# மூதாட்டியிடம் 5 பவுன் நகை திருட்டு!

நத்தம்,டிச,3

தேனிபங்களாமேட்டை சேர்ந்தவர் சோலையம்மாள். (66) இவர் திண்டுக்கல் மாவட்டம் நத்தம்அண்ணாநகரில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்தவர் நேற்று முன்தினம் காலை அப்பகுதியில் நடந்த கும்பாபிஷேகத்தை பார்ப்பதற்காக கூட்டத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது மர்ம நபர் யாரோ அவரது கழுத்தில் அணிந்து இருந்த 5 பவுன் தங்க சங்கிலியை திருடிச் சென்று விட்டனர். இதில் பதற்றமடைந்த சோலையம்மாள் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசில் புகார் செய்தார்.அதன் பேரில் போலீஸ்சப்இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து நகை திருட்டு குறித்து விசாரணை நடத்தி வருகிறார்.

### திருக்கோவிலூர்

# வருவாய் வட்டாட்சியரிடம் விவசாயத்திற்காக பயன்பாட்டில் உள்ள பாதையை தடுக்க கூடாது!

## அனைத்து கட்சி சார்பாக விவசாயிகள் மனு!!

கள்ளக்குறிச்சி டிச.03

கள்ளக்குறிச்சிமாவட்டம்திருக்கோவிலூர்சந்தைப்பேட்டை அம்பேத்கர் நகர் குடியிருப்பு பகுதியில் திடக்கழிவு கிடங்கு கட்டக்கூடாதுஎன்றுஎதிர்ப்புதெரிவித்துவந்தனர்இந்நிலையில் அந்த இடம் சாகுல் அமித் என்பவருக்கு சொந்தமானது என்று திருக்கோவிலூர் சார் ஆட்சியர் விசாரணை நடைபெற்று அந்த விசாரணையில் சாகுல் அமித் மனு தள்ளுபடி செய்து சார் ஆட்சியர்உத்தரவிட்டிருந்தார்அதனைத்தொடர்ந்துதிடக்கழிவு கிழங்கு வேலை தொடங்கப்பட்டது அதனைத் தொடர்ந்து சாகுல் அமித் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததை அடுத்து சார் ஆட்சியர் மறுவிசாரணைக்கு



மனுவை ஏற்றுக்கொண்டார்அதனைத்தொடர்ந்துஅந்த இடம் யாருக்கு உரிமை என்று தெரிந்த பிறகு விசாரணை முடியும் வரை வேலைதொடங்கக்கூடாது என்றுஅப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்து தொடர்ந்து டி. கீரனூர்தனியா ரெசிடென்சி எதிரில்விவசாய நிலமான 300 ஏக்கருக்கு பயன்படுத்தும் பாதையை தீயணைப்புத் துறைகளுக்காக கட்டிடம் கட்டப் போவதாகசெய்திகள்வந்ததுஅடுத்துவிவசாயிகள்கண்டிப்பாக பாதையை மறிக்க கூடாது என்று அனைத்து கட்சி சார்பின் சார்பாகதிருக்கோவிலூர்வட்டாட்சியர்மனுஅளித்தனர்இதில் பொதுமக்கள் விவசாயிகளான பலர் கலந்து கொண்டனர்

### டிசம்பர் 4—5 அன்று நியூடெல்லியில் நடைபெறுகின்ற

# ரஷ்யா—இந்தியா மன்றம் இருதரப்பு வர்த்தகம் விரிவுபடுத்தும்!

சென்னை டிச.03

ரஷ்யா—இந்தியாமன்றம் 2025 டிசம்பர் 4—5 தேதிகளில் நியூ டெல்லியில் நடைபெறுகிறது. ரோஸ் காங்கிரஸ் அறக்கட்டளையும் இந்திய தொழில் மற்றும் வாணிப சம்மேளனம் (FICCI) இணைந்து நடத்தும் இம்மன்றம், *"The Power of Partnership is in the Unity of Purpose. Export to Russia."* என்ற கோஷத்துடன் நடைபெறுகிறது. மன்றத்தின் முக்கிய அம்சமாக, இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர வர்த்தகத் திறன்கள் மற்றும் இந்திய நிறுவனங்கள் ரஷ்ய சந்தையில் அணுகலை விரிவுபடுத்தும் வாய்ப்புகள் குறித்து முழுமைக் கூட்டம் நடைபெறும்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது மன்றத்தின் பிரதான நோக்கமாகும். "இந்தியாவின் உற்பத்தி, வேளாண்மை மற்றும் ஐடி துறைகள் திறனைப் பொருத்தமாகப் பயன்படுத்து ரஷ்ய சந்தையில் இந்திய பொருட்களின் இருப்பு அதிகரிப்பது முக்கியம்," என்று ரஷ்ய கூட்டமைப்பு தலைவர் அலுவலகத்தின் துணை தலைமை அதிகாரி மாக்ஸிம் ஒரேஷ்கின் தெரிவித்தார். மேலும், "கடந்த ஐந்து ஆண்டுகளில் பரஸ்பர வர்த்தகம் ஏழு மடங்கு உயர்ந்துள்ளது; இந்திய சந்தை ரஷ்ய நிறுவனங்களுக்கு அதிகமுனைப்புஅளிக்கிறது,"என்றுரஷ்யகூட்டமைப்பு தலைவர் ஆலோசகர் அன்டன் கோப்யகோவ் கூறினார்.

### கோவை பொள்ளாச்சி சாலையில்

# இயற்கை எழிலுடன் அமைந்துள்ள "மெட்ரோ சிட்டியின் ஃப்ரூட் பே 2.0 கார்டன்"!

பொள்ளாச்சி டிச.03



கோவை பொள்ளாச்சி சாலையில் ஒத்தக்கால் மண்டபம், உதவும் கரங்கள் அருகில் மெட்ரோ சிட்டி டெவலப்பர் சார்பில் 10 ஏக்கர் பரப்பளவில் ஃப்ரூட் பே கார்டன் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மெட்ரோ சிட்டி நிர்வாக இயக்குனர்கள் முரளிதரன் கிரிதரன் கூறுகையில், மெட்ரோ சிட்டி நிறுவனம் கோவையில் மிக முக்கியமான ப்ராஜெக்ட் களை சிறப்பாக செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கோவை பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள ஒத்தக்கால் மண்டபம் அருகில் ஒரு புதிய அனுபவமாக ஃப்ரூட் பே கார்டன் சிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கார்டன் சிட்டியானது சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் மிகச் சிறப்பாக அமைத்துள்ளோம். சிறப்பான ப்ராஜெக்ட் களை மட்டுமே மக்களுக்கு தொடர்ந்து கொடுத்து வருகிறோம். அதேபோல் இந்த கார்டனில் நல்ல குடிநீர், மின்சார வசதி, சிசிடிவி, 21 வகையான மரங்கள், பேவர் பிளாக் ரோடு, தெருவிளக்கு,சுற்று சுவர் என பல்வேறு வசதிகளுடன் இந்த கார்டன் அமைக்கப்பட்டுள்ளது இங்கு திறப்பு விழா சலுகையாக 1 சென்டின் விலை 2 லட்சத்து 59ஆயிரம் என்று மிகக் குறைவான விலையிலேயே மக்களுக்கு கொடுக்க இருக்கிறோம் என்றார். மேலும் இந்த கார்டனை வந்து பார்க்கும் மக்கள் அனைத்து வசதிகளும் மிகச் சிறப்பாக இருக்கிறது என்றும், மிக விரைவாக புக் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். மேலும் இது குறித்து விவரங்கள் அறிந்து கொள்ள : 9489637367,9384723734.



### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# விநாயகர், மாரியம்மன், சாமந்தம்மன் கோவில்களில் கும்பாபிஷேகம்!

## 1,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்பு!!

கிருஷ்ணகிரி டிச.03

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த, பண் ணந்துார், இந்திரா நகரில் உள்ள விநாயகர், மாரியம்மன், சாமந்தம்மன் கோவில்களுக்கு, கும் பாபிஷேகம் நடந்தது.

இதையொட்டி விநாயகர், மாரி யம்மன்,சாமந்தம்மன் உள் நடந்தது. ளிட்ட கோவில்களின் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் இதில் சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 1,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். அதேபோல் பாரூர் அடுத்த, புங்கம்பட்டி கிராமத்தில், 200 அடி உயர குட்டை மலை மீது முன்தினம் ராட் சத பொக்லைன் இயந்திரம் மூலம், 12 அடி உயர நாகர் அம்மன் சிலையை பீடத்தின் மீது அமைத்து, அதற்கு பூஜை

கும்பாபிஷேகம் நடந்த, போச்சம்பள்ளி, பாரூர், புங்கம்பட்டி, குட்டை மலைமீது அமைந்துள்ள நாகர் அம்மன் கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் சென்றனர்.

செய்த நிலையில், சுற்று வட்டாரத்தை சேர்ந்த, புனித தீர்த்த குடங்களுடன் 1,000க்கும் மேற்பட்ட பக் வேத மந்திரங்கள் முழங்க கும் தர்கள் பாபிஷேகம் நடந்தது. இதில் 1,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

### திருக்கோவிலூர் அருகே

# குடிநீர் தொட்டியை தூய்மைப்படுத்தி சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும்! கிராம மக்கள் கோரிக்கை!!





திருக்கோவிலூர் டிச.03

விழுப்புரம்மாவட்டம்திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட வி. சித்தாமூர் கிராமத்தில் பட்டியல் இன மக்கள் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஆயிரம் குடும்பத்திற்கும் சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி மட்டும் உள்ளது இந்நிலையில் அந்த சின்டெக்ஸ் குடிநீர் தொட்டியானது தூய்மைப்படுத்தப்படாமல் நோய் தொற்று பரவும் அபாயமும் மேலும் அந்த குடிநீரால் காய்ச்சல் டெங்கு மலேரியா உள்ளிட்ட நோய்கள் பாதிக்கப்பட கூடும் எனவும் எனவே அதை தூய்மைப்படுத்தி முறையாக சுத்துவமான குடிநீரை வழங்க வேண்டும் என பட்டியலின் மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்

மேலும் அப்பகுதியில் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளதால் புதிதாக மேல்நிலை நீர் தேக்க தொட்டி தர வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் சார்பாக பாரதிய ஜனதா கட்சி மாவட்ட உள்ளாட்சி பிரிவு TK. குப்பன் கோரிக்கை வைக்கின்றனர்.



### தர்மபுரியில்

# கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு அகல் விளக்குகளின் விற்பனை சூடுபிடித்தது!

தர்மபுரி டிச.03

தர்மபுரி சித்தவிரப்பு செட்டி தெரு மற்றும் பெரியார் சிலை போன்ற பகுதிகளில் விற்பனைக்கு அதிக அளவில் விளக்குகள் குவிக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய அகல் விளக்குகள் முதல் பல்வேறு வடிவங்களில் உள்ள விளக்குகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதன் விலை ₹5முதல் ₹300 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

தர்மபுரி நகரத்தின் கடைவீதி பகுதிகளில், குறிப்பாக சித்தவிரப்பு செட்டி தெரு மற்றும் பெரியார் சிலை அருகே, அகல் விளக்கு விற்பனை அதிகளவில் நடைபெற்று வருகிறது. இதில்

பலவகை விளக்குகள் பாரம்பரிய அகல் விளக்குகளுடன், பல்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் விளக்குகள் விற்பனைக்கு வந்துள்ளன. விளக்குகளின் விலை அவற்றின் வடிவமைப்பு மற்றும் அளவைப் பொறுத்து அமைகிறது, ₹5முதல் ₹300 வரை உள்ள விளக்குகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கார்த்திகை தீபத்திருவிழாவில் மண் விளக்குகளில் தீபம் ஏற்றுவது பாரம்பரியமாக நடைபெற்று வருவதால்,

இந்த ஆண்டு விற்பனை அமோகமாக உள்ளது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றியம் கதிரம்பட்டி ஊராட்சி மேட்டுகொள்ளை பகுதியில் ஒன்றிய பொது நிதியின் கீழ் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணி ஒன்றிய சேர்மன் விஜயா அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. இதற்கு சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் ஒன்றிய குழு துணை தலைவர் ஞானசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் சரஸ்வதி ஜெயகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் கலைவாணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப தமிழ்நாடு ஆதிதிராவிட) வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் 9 பயனாளிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் மானியத்தில் ரூ.97.50 இலட்சம் மதிப்பிலான நிலத்திற்கான ஆவணங்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பாலமுருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷாராணி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) சரண்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# காஞ்சிபுரத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்த த.வெ.க.வினர்!



காஞ்சிபுரம் டிச,3

தமிழக வெற்றி கழகத்தின் உத்திரமேரூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ரஞ்சித் குமார் அறிவிக்கப்பட்டு ஒன்றிய செயலாளர் அடையாள அட்டையை மாவட்ட செயலாளர் எஸ் பி கே தென்னரசு இடம் பெற்றுக் கொண்டு உத்திரமேரூர் வந்தவாசி சாலையில் உள்ள தமிழக வெற்றி கழகத்தின் கொள்கைதலைவர்கள்பெரியார்சிலைக்கும் பின்னர் அங்கிருந்து கட்சி நிர்வாகிகளுடன் காஞ்சிபுரம் சாலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்பின்னர்அங்கு உள்ள பொது மக்களுக்கு இனிப்புகள்வழங்கினர்அதைத்தொடர்ந்து திருப்புலிவனத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகளும் தொண்டர்களும் மாலைஅணிவித்தும்சால்வைஅணிவித்தும் வாழ்த்து தெரிவித்தனர் இந்நிகழ்வில் மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர் பின்னர் பொது மக்களுக்கு கட்சி நிர்வாகிகளுக்கும்ஆறு சுவையான உணவு வழங்கினார் அதைத்தொடர்ந்து காஞ்சி ஒன்றிய செயலாளர் மாகரல் வினோத் மாகரல் பஸ் நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் அதைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் மேளதாள முழங்க பெண்கள் ஆரத்தி எடுத்து அவருக்கு ஆள் உயர மாலை அணிவித்து சால்வை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் சென்று மாகரலிஉள்ள கட்சி அலுவலகத்தில் வைத்து வாழ்த்துக்களை தெரிவித்தனர் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர் பொது மக்களுக்கும் கட்சி நிர்வாகிகளுக்கு உணவு வழங்கினார் நிகழ்வில் ஏராளமான பொதுமக்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்



ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வடக்கூரில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி அம்பிகா சமேத சுந்தரேஸ்வர ஆலயத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. ஆச்சாரியார்கள் முன்னிலையில் கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம் உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்று பின்பு கோவிலை வலம் வந்து விமான கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டது பின்பு பக்தர்கள் புனித நீர் தெளிக்கப்பட்டு தீப ஆராதனை பூஜைகள் நடைபெற்றன அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் தமிழக வெற்றி கழகத்தின் பேருந்து சேவை கோரிக்கை மனு!



விழுப்புரம் டிச,3

விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் பகுதியை சேர்ந்த தமிழக வெற்றி கழகத்தின் சார்பில், விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன் தலைமையில் இன்று காலை விழுப்புரம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு ஒன்றை அளித்தனர்.

மனுவில், கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் வருவாய் குறைவாக இருப்பதாகக் கூறி நிறுத்தப்பட்ட விழுப்புரம் – திருக்கனூர் வழியாக பாண்டிச்சேரி செல்லும் அரசு பேருந்து மற்றும் விக்கிரவாண்டி – கோலியனூர் வழியாக பாண்டிச்சேரி செல்லும் அரசு பேருந்து ஆகிய இரு அரசு பேருந்துகளையும் மீண்டும் அதே பழைய வழித்தடங்களில் இயக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பேருந்துகள் இயக்கப்படாமல் இருப்பதால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், தினமும் வேலைக்கு செல்லும் பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், அவர்களின் பயண துன்பங்களை கருத்தில் கொண்டு உடனடியாக பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

# ராஜபாளையம் மாரியம்மன் கோவில் 100 வது ஸதாபிசேக விழா!



ராஜபாளையம் டிச.3

ராஜபாளையம் திருவனந்தபுரம் கோட்டை (பச்சமடம்) சத்திரிய ராஜூக்களுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருக்கோவில் நூறாவது ஸதாபிசேகம் விழா நடைபெற்றது காலை மெசேஜ் ஆகுங்கள் பூரண கும்ப அபிஷேகங்கள் நடை பெற்றது மாலை ஸ்ரீனிவாச திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது இரவு அருள் மிகு ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடாஜலபதி உற்சவ புறப்பாடு நடைபெற்றது விழா ஏற்பாடுகளை திருவனந்தபுரம் கோட்டை தலைவர் எஸ் ஏ ஜெகநாத ராஜா துணைத் தலைவர் ராதாகிருஷ்ண ராஜா செயலாளர் முருகேசன் ராஜா பொருளாளர் முத்துகிருஷ்ண ராஜா மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர் ஏராளமான பக்தர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர்.

# முதியவரிடம் 5 பவுன் நகை திருட்டு!

நத்தம்,டிச,3

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்அண்ணாநகரை சேர்ந்தவர் வீரமணி(72) இவர் நேற்று முன்தினம் காலை அப்பகுதியில் நடந்த கும்பாபிஷேகத்தில் யாகசாலை பூஜையை பார்தது விட்டு கும்பாபிஷேகத்தை பார்ப்பதற்காக கூட்டத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது மர்ம நபர் யாரோ அவரது கழுத்தில் அணிந்து இருந்த 5 பவுன் தங்க சங்கிலியை திருடிச் சென்று விட்டனர். இதில்அதிர்ச்சியடைந்தவீரமணிஇச்சம்பவம் குறித்து நத்தம் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீஸ்சப்இன்ஸ்பெக்டர் அருண்நாராயணன் வழக்கு பதிவு செய்து நகை திருட்டு குறித்து விசாரணை நடத்தி வருகிறார்.

# கோவில் குளத்தில் மிதந்த மணமகன் சடலம்!

## போலீசார் தீவிர விசாரணை!!

ராணிப்பேட்டை, டிச.3

அரும்பாக்கம் கிராமத் தைச் சேர்ந்த பெரியசாமி ஆனந்தி தம்பதியினரின் மகன் அஜித்குமார் (வயது 27). இவர்கள் சென்னை யில் தங்கி கட்டிட வேலை செய்து வந்துள்ளனர். அதே போல், இவர்கள் வேலை செய்த அதே இடத்தி லேயே கள்ளக்குறிச்சி யைச் சேர்ந்த மணமகள் சந்தியா{ வ 23} குடும் பத்தினரும் தங்கி கட்டிட வேலை செய்து வந்துள்ளனர் இரு குடும் பத்தினருக்கும் நட்பு ஏற் பட்டு உறவினர்களைப் போல பழகி வந்துள்ளனர். அரும்பாக்கம் பெரியசாமி தனது மகன் அஜித்குமா ருக்கு, சந்தியாவை பெண் கேட்டுள்ளார். இரு குடும் பத்தினர்சம்மதத்துடன், நேற்று (30.11.25) காலை 6:00 மணி முதல் 7:30 மணிக்குள் அஜித் குமாருக் கும் சந்தியாவுக்கும் அரும் பாக்கத்தில் உள்ள குளக் கரை அம்மன் கோவிலில் இவர்களின் திருமணம் கோலாகலமாக நடைபெற் றுள்ளது. திருமணம் முடிந்த மகிழ்ச்சியில் மண மக்கள் மற்றும் உறவினர் கள் இருந்தபோது மாப்பிள்ளை கோலத்துடனே கோயில் அருகே உள்ள குளத்தின் அருகில் சிறுநீர் கழிக்கச்சென்றுள்ளார். சென்றவர் அரை மணி நேரத்திற்கு மேலாகியும் அவர் திரும்பி வராத தால், அதிர்ச்சியடைந்த உறவினர்கள் தேட ஆரம் பித்துள்ளனர். சுமார் இரண்டு மணி நேரம் தேடுதலுக்குப்பிறகு மாப்பிள்ளை கோலத்து டனே அஜித்குமார் குளத் தில் சடலமாக மிதந்து ள் ளார். இதனைக் கண்டு மணமகள்வீட்டார் மற்றும் மாப்பிள்ளை வீட்டார் கதறி அழுது கூச்சலிட்டுள் ளனர் அங்கிருந்த பொது மக்கள் அனைவரின் உதவி வைத்தனர். யுடன் கடலத்தை மீட்டுள்ளனர் இச்சம்ப வம்குறித்துகலவைகாவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், மணமகன் அஜித் குமாரின் சடலத் தைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக மருத்து வமனைக்கு அனுப்பி மேலும், போலீசார் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

### தமிழுக்கு துரோகம்:

# தி.மு.க. அரசு மீது த.வெ.க. விமர்சனம்!

சென்னை, டிச.3

கட்டாய தமிழ் பாடத் தில் 85 ஆயிரம் ஆசிரியர் கள் தோல்வி அடைந்துள் ளது தமிழுக்கு திமுக செய்த துரோகத்தின் வெளிப்பாடு என தவெக கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் விமர்சித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: திமுக ஆட்சி யில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டித் தேர்வில் கட் டாய தமிழ் பாடத்தில் 85 ஆயிரம் பேர் தோல்விய டைந்திருக் கிறார்கள். இது தமிழை காப்பாற்று கிறேன் என வெற்று வச னம் பேசும் ஆட்சியின் தோல்வி. நடைமுறையில் தமிழ் எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் இந்த தேர்வு முடிவுகள் சாட்சி. நடத்தும் திமுக தனது முந்தைய ஆட்சிக் காலங்களிலும் இப்போதும் தமிழுக்கு செய்த துரோகத்தின் வெளிப் பாடு தான் இது. இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# ஆட்டோவில் தவறவிட்ட தங்க டாலர்; போலீசில்ஒப்படைத்த ஆட்டோ டிரைவர்!

அரக்கோணம், டிச. 3

அரக்கோணம் பழனி பேட்டையை சேர்ந்தவர் அன்வர் பாஷா (60). இவர் பல ஆண்டுகளாக சொந்தமாக ஆட்டோ வைத்துஓட்டிவருகிறார்.

சன் ன நுங்கம்பாக்கத்தை சேர்ந் தவர் பிரியா (43). இவர் சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர்சுவாமி திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்வதற்காக நேற்று குடும்பத்துடன் ரயிலில் புறப்பட்டு அரக்கோணம் வந்தார். பின்னர் அங்கிருந்து அன் வர் பாஷா ஆட்டோ மூலம் சோளிங்கருக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து பின்னர் அதே ஆட்டோவில் மீண்டும் திரும்பி அரக்கோணத் துக்கு வந்துள்ளார். அங் கிருந்து ரயில் மூலம் சென்னை சென்றுள்ளார். இந்நிலையில் அன்வர் பாஷா ஆட்டோவை சுத்தம் செய்ய முற்பட்டபோது அதில் தங்கத்தால் ஆன ஒரு சவ ரன் டாலர் ஒன்று கிடைத் தது. அதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக அதை அரக்கோணம் டவுன் இன்ஸ்பெக்டர் அசோக னிடம் ஒப்படைத்தார். பின்னர் நடந்த விசார ணையில் அது சென்னை சேர்ந்த பிரியாஎன்பவரது டாலராக இருக்கலாம் என தெரிய வந்தது. இதைதொடர்ந்துஅவரை தொடர்பு கொண்ட போலீசார் இதுகுறித்து தகவல் தெரிவித்தனர். பின்னர் அரக்கோணம் டவுன் காவல் நிலையத்திற்கு வந்த பிரியாவிடம் தங்க டாலரை இன்ஸ்பெக்டர் அசோ கன் ஒப்படைத்தார். மேலும் தனது தவற விட்ட தங்க ஆட்டோவில் பயணி டாலரை நேர்மையுடன் கொண்டு வந்து காவல் நிலையத்தில் ஒப்ப டைத்த ஆட்டோ டிரைவர் அன்வர் பாஷாவை பொன்னாடை அணி வித்து இன்ஸ்பெக்டர் அசோகன்மற்றும் போலீசார் பாராட்டினர்.



# ரூ.17.10 கோடி மதிப்பீட்டில் சாலை பணி!

## அமைச்சர் எ.வ வேலு துவக்கி வைத்தார்!!

திருப்பத்தூர் டிச.3

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், ஏலகிரி மலை ஊராட்சி, நிலாவூர் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் சார்பில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலையாகதரம் உயர்த்துதல் திட்டத்தின் கீழ் ரூபாய் 17.10 கோடி மதிப்பீட்டில் 10.05 கிலோமீட்டர் சாலை பணியினை மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.சிவ சௌந்திரவல்லி இ.ஆ.ப சட்டமன்ற உறுப்பினர்கள் க. தேவராஜ் ஜோலார்பேட்டை அ. நல்லதம்பி திருப்பத்தூர் அ.செ.செல்வநாதன் ஆம்பூர் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் மாவட்ட கவுன்சிலர் கவிதாதண்டபாணி, திருப்பத்தூர் திமுக மாவட்ட மாணவரணி பொறியாளர் தே. பிரபாகரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இதில். மாவட்ட பிரதிநிதிகள். பொன்ரங்கம், மோகன், துணை செயலாளர். துளசி, ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளர். ரமேஷ், ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சௌந்தர், ஒன்றிய அமைப்புசார ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் ரஞ்சித்குமார், மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி நிர்வாகிகள் கிளை செ யலாளர்கள், கிளை பிரதிநிதிகள் கழக தோழர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### மதுரை மாவட்டம் பாலமேட்டில்

# ஸ்ரீ செல்வ விநாயகர் சோனியா சுவாமி வீரகாளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம்!



அலங்காநல்லூர், டிச,3

மதுரை மாவட்டம், பாலமேட்டில் ஸ்ரீ செல்வ விநாயகர் சோணையாசாமி கோவில்கும்பாபிஷேக மூன்றுகால யாக பூஜையுடன் ,அழகர் கோவில் /ராமேஸ்வரம், கரந்தமலை காசி உட்பட புண்ணிய தீர்த்தங்கல் கொண்டு வரப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க தீவட்டி பரிவாரங்களுடன் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடகி திருக்கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த விழாவில், பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி சோழவந்தான் எம். எல். ஏ. வெங்கடேசன் பாலசுப்பிரமணியம் ஒன்றியச் செயலாளர் தன்ராஜ் பரந்தாமன் முத்தையன் அருண்குமார் . சுற்று வரலாறு கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர். கும்பாபிஷேகத்தில், அன்னதானம்வழங்கப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் செய்திருந்தனர் , பாதுகாப்பு ஏற்பாடுகளை, பாலமேடு போலீசார் செய்திருந்தனர்.

# சேலத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்!

## மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்றார்!!

சேலம்,டிச.3

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 265 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 11 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார். இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வாணீசுவரி, திட்ட அலுவலர் பழங்குடியினர் நலன் சுகந்தி பரிமளம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஜெயக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சின்னுசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, தாட்கோ பொது மேலாளர் எஸ். சக்திவேல் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பால் உற்பத்தியாளர்களுக்கு

# பொங்கல் போனஸ் கேட்டு மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் விவசாயிகள் மனு!

திருப்பத்தூர் டிச .3

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் காவேரிபட்டு பகுதியில் செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக பால் உற்பத்தியாளர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்காமல் நிர்வாகம் காலம் தாழ்த்தி வருகிறது. மேலும் வருகின்ற பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்க வேண்டும் என கலெக்டரிடம் மனு அளித்தனர். அதேபோன்று திருப்பத்தூர் அடுத்த ஏ. கே. மோட்டூர் ஊராட்சி உதய நகர் பகுதியிலுள்ள இருளர் இன மக்களுக்கு அரசு சார்பில் இலவசவீடுகள்கட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த வீடுகளுக்கு இதுநாள் வரை மின்சார இணைப்பு வழங்கவில்லை என அப்பகுதி மக்கள் மின்சார வசதி கேட்டு கலெக்டரிடம் மனு அளித்தனர். மனுக்களை பெற்றுக்



கொண்ட கலெக்டர் உங்கள் அனைவரின் கோரிக்கை மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாகஉறுதியளித்தார். இந்தகூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட திட்ட இயக்குனர் உமா மகேஸ்வரி, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கதிர் சங்கர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## குமாரபாளையம் திருவள்ளுவர் நகரில்

# மங்களாம்பிகை உடனமர் மகேஸ்வரர் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா!

## அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்பு!!

குமாரபாளையம், டிச. 3

குமாரபாளையம் திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள அருள்மிகு மங்களாம்பிகை உடனமர் மகேஸ்வரர் கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



குமாரபாளையம் திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள அருள்மிகு மங்களாம்பிகை உடனமர் மகேஸ்வரர், அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத சௌந்தர்ராஜ பெருமாள், அருள்மிகு பஞ்சமுக மகாவீரா ஆஞ்சநேயர் திருக்கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேக விழா கணபதிபூஜையுடன்துவங்கியது. பவானி சங்கமேஸ்வரர் கோவில் காவிரி ஆற்றிலிருந்து தீர்த்தகுடங்கள் எடுத்து வரப்பட்டு இரண்டு நாட்களாக யாக சாலை பூஜைகள் நடந்தன. நேற்று காலை மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. திண்டுக்கல் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிய பரமாச்சாரியார் சுவாமிகள், ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள், திருவண்ணாமலை கருடானந்தா மகராஜ் சரஸ்வதி சுவாமிகள், ஈரோடு ஸ்ரீ விஜய சுவாமிஜி, தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன், முன்னாள் அமைச்சரும், குமாரபாளையம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான தங்கமணி உள்பட பலர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். டி.எஸ்.பி. கிருஷ்ணன், கவுதம், இன்ஸ்பெக்டர் தவமணி தலைமையிலான போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தனர். பக்தர்கள் பெருமளவில் பங்கேற்றனர். அனைவருக்கும் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கபட்டது. கும்பாபிஷேக தீர்த்தம் ட்ரோன் மூலம் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் செய்திருந்தனர்.



# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ரத்ததான முகாம்!

விழுப்புரம்,டிச.3

விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பாக துணை முதலமைச்சரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயாநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததான முகாம் நடைபெற்றது கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியில் நடைபெற்ற ரத்த தான முகாமை விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் பொன் கௌதமசிகாமணி கலந்து கொண்டு முதல் நபராக ரத்த தானம் வழங்கி முகாமை தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக அளவில் ரத்த தானம் செய்யப்படுவதாகவும் அதேபோல் உடல் தானம் செய்வதிலும் தமிழகம் முன்னிலை வகிப்பதற்கு முக்கிய காரணம் நம் முதல்வர் மு க ஸ்டாலின் தான் என பெருமிதம் தெரிவித்தார். பின்னர் முகாமில் விழுப்புரத்தைச் சேர்ந்த திமுக நிர்வாகி பாஸ்கரன் என்பவர் 172 முறை ரத்த தானம் செய்ததை முன்னிட்டு அவருக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் ராயல் அன்பு ஒன்றிய கழக செயலாளர் தங்கம் ரவிச்சந்திரன் பிரபு மாவட்ட துணை செயலாளர் கற்பகம், தேவி முருகன், நகர செயலாளர் கோபி கிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் கோபு கோல்டு ரவி உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் அஸ்தம்பட்டியில்

# விபத்தில் தீப்பிடித்து எரிந்த கார்!

## கட்டுப்பாட்டை இழந்து சாலையோர கம்பத்தில் மோதியது!!

சேலம் டிச.3

சேலம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து கன்னங்குறிச்சி நோக்கி கார் ஒன்று நேற்று இரவு வந்து கொண்டிருந்தது. அஸ்தம்பட்டி அம்மா உணவகம் அருகே வந்தபோது எதிர்பாராத விதமாக சாலையோரம் இருந்த கம்பத்தில் கார் மோதி விபத்துக்குள்ளானது.



இந்த விபத்தில் திடீரென கார் தீ பற்றி எரிய தொடங்கியது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த கார் ஓட்டுநர் லோகேஷ் மற்றும் அவரது நண்பர்கள் உடனடியாக காரில் இருந்து வெளியேறினர். தொடர்ந்து சாலையில் சென்றவர்கள் செவ்வாய் பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த செவ்வாய்பேட்டை தீயணைப்பு துறையினர் கொழுந்துவிட்டு எரிந்த காரை தண்ணீரை பீச்சி அடித்து தீயை அணைத்தனர்.

ஆனால் தீ பற்றி எரிந்ததில் கார் முழுவதும் எலும்புக்கூடானது. அதிருஷ்டவசமாக உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இந்த சம்பவம் குறித்து அஸ்தம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மேட்டுப்பாளையம் அருகே

# மர்ம விலங்கு தாக்கி 7 ஆடு பலி!

## வனத்துறை விசாரணை!!

மேட்டுப்பாளையம், டிச.03–

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே மொக்கை நகர் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த ஏழு ஆடுகள் மர்ம விலங்கு தாக்கி பலி

காரமடை அருகே மொக்கை நகர் பகுதியைச் சேர்ந்தவர் துளசி மணி இவர் 10 க்கும் மேற்பட்ட ஆடுகளை வைத்து வளர்த்து வருகிறார்.



இந்த நிலையில் நேற்று மாலை அருகே இருந்த தோட்டத்து பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட ஆடுகள் அனைத்தும் அலறல் சத்தம் கேட்டுள்ளதுஇதனைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்த போது 6 ஆடுகள் கழுத்தில் காயத்துடன் இறந்து கிடந்துள்ளது

மேலும் இரண்டு ஆடுகள் பலத்த காயமடைந்து ஆடுகள் இரண்டை மீட்டனர்.

மேலும் இது குறித்து வனத்துறை மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்து இரண்டு ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் மேலும் ஒரு ஆடு சிகிச்சை பலனின்றி இறந்தது

இச்சம்பவம் குறித்து மேட்டுப்பாளையம் வனத்துறை மற்றும் காரமடை காவல்துறையினர் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்

## ஓமலூர் அருகே

# வாகனம் மோதி முதியவர் சாவு!

## யார் அவர்? போலீசார் விசாரணை!!

ஓமலூர்,டிச.3

ஓமலூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் வாகனம் மோதியதில் முதியவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து ஓமலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை ஆர்சி செட்டிப்பட்டி மேம்பாலம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதியவர் ஒருவர் வாகனம் மோதியதில் பலத்த அடிபட்டு மயங்கிய நிலையில் கிடந்தார். விபத்தை ஏற்படுத்தி வாகனம் நிற்காமல் சென்று விட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த கோட்ட மேட்டுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் முத்துகிருஷ்ணன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பொதுமக்கள் உதவியுடன் சுமார் 60 வயது மதிக்கத்தக்க முதியவரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக



தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து ஓமலூர் இன்ஸ்பெக்டர் அங்கப்பன், சிறப்பு உதவி ஆய்வாளர் ராசப்பன் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இறந்து போன முதியவர் யார் எந்த ஊரைச் சேர்ந்தவர்.

அவர் மீது மோதிய வாகனம் எது என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உடுமலை சிவன் கோயில்களில் சங்காபிஷேக விழா!



உடுமலை, டிச.03–

கார்த்திகை மாத சோமவார தினத்தில் சிவன் கோவில்களில் சங்காபிஷேகம் நடத்தப்படுவது வழக்கம் அந்த வகையில் சோமவாரத்தை ஒட்டி உடுமலை ரத்தினலிங்கேஸ்வரர் கோவிலில் சிவபெருமானுக்கு 108 சங்காபிஷேக விழா நடந்தது.

பின்னர் வலம்புரி சங்கிற்குள் பன்னீர் விளாமிச்சைவேர். வெட்டிவேர். மஞ்சள். ஏலக்காய் , உள்ளிட்டபல்வேறுவாசனை திரவியங்கள் கொண்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சிவபெருமானுக்கு அபிஷேகம் மற்றும் தீபாரணை நடந்தது. இதைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய சிவபெருமானை பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதேபோல் உடுமலை பிரசன்ன விநாயகர் கோவில் உட்பட உடுமலை சுற்றுவட்டார பகுதியில் சிவாலயங்களில் சங்க அபிஷேக விழா நடந்தது நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் உள்ள எழுமாத்தூரில் புதிய திராவிட கழகத்தின் 'வெல்லட்டும் சமூகநீதி' 6 ஆவது மாநில மாநாடு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக துணை முதல்வா் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.

# திருப்பத்தூரில் வாலிபால் விளையாட்டு போட்டி!

## எம்எல்ஏக்கள் தொடங்கி வைத்தனர்!!







திருப்பத்தூர் டிச.3

திருப்பத்தூர் மாவட்டம்.திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மாண்புமிகு துணை முதலமைச்சர் மாநில இணை செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு 1000நபர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் அரசு பள்ளிகளுக்கு இடையென மாபெரும் வாலிபால் விளையாட்டு போட்டி மற்றும் நல திட்ட உதவிகள் திருப்பத்தூர் சார் ஆட்சியர் அலுவலக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அப்போது விளையாட்டு போட்டியை ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் மற்றும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி ஆகியோர் வாலிபால் விளையாடி போட்டியை துவக்கி வைத்தனர்.

மேலும் இந்த போட்டியில் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் இந்த போட்டியில் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் திமுக திருப்பத்தூர் நகர செயலாளர் ராஜேந்திரன், நகர மன்ற தலைவர் சங்கீதா, விழா ஏற்பாடு. மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெங்கடேஷ் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வடிவேலு. கந்திலி ஒன்றிய செயலாளர்கள் குணசேகரன்.முருகேசன். மோகன்ராஜ். நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஞானசேகரன். இறுதியாக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பி .வி பிரேம்குமார் நன்றி உரை கூறினார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தமிழ்மணி.நகர இளைஞரணி துணை அமைப்பாளர் அரவிந்தன். நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் திருமுருகன். கார்த்த. வீ. சுரேஷ். பிரதீஷ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்பள்ளி மாணவர்கள் மாணவிகள் நோட்டுப் புத்தகங்களை பெற்றுக் கொண்டு தமிழகத் துணை அமைந்துள்ளறைக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள் இந்த நிகழ்ச்சியானது திருப்பத்தூர் மாவட்டம் நகர விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக நடைபெற்றது திமுக பிரமுகர் மற்றும் பொதுமக்கள் ஏராளமான நிகழ்ச்சியை கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகள்விளையாடிய கைப்பந்து போட்டி மற்றும் நோட்டுப் புத்தகங்களை கண்டு மகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்



தாராபுரம் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் ஓய்வு பெற்ற விவசாயத்துறை மாவட்டமுதன்மைஅதிகாரியாகசெல்வராஜாவுக்குசமூகசேவகர்சிவசங்கர்நேரில்சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



திருப்பூர் நொச்சிபாளையம் பிரிவில் பாரதிய ஜனதா கட்சியினரும் பொதுமக்களும் சேதமடைந்த சாலையை சீரமைக்க வலியுறுத்தி வாழைக்கன்றுகளுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.